நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## S.T.C. No. 1379 /2025

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூபதிராஜா |
| தந்தை / கணவர் பெயர் | : | அருணாச்சலம் |
| கிராமம் | : | நங்கவள்ளி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 2 |
| வயது | : | 20 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 22–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.20 PM.

1. நான் தற்போது நங்கவள்ளியில் குடியிருக்கிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரியை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு வேறு ஒரு வழக்கிற்காக நண்பருடன் சென்றபோது போலீசார் என்னிடம் எதுவும் எழுதாத வெள்ளை தாளில் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து

என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.( **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. எதிரி எனது நண்பர் என்றால் சரியல்ல. நங்கவள்ளி பத்ரகாளியம்மன் வீதியும், ஈஸ்வரன் கோவில் வீதியும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். நான் ஈஸ்வரன் கோவில் வீதியிலும்,எதிரி பத்ரகாளியம்மன் கோவில் வீதியிலும் உள்ளார் என்றால் சரிதான். எதிரி கஞ்சா விற்றது பற்றியும் அவரை போலீசார் பிடித்தது பற்றியும் தெரியுமா என்றால் தெரியாது.

2. இந்த வழக்கு விவரங்களை போலீசார் என்னிடமும், என்னுடன் கையெழுத்து செய்த புகழேந்தியிடமும், சொல்லிய பிறகு நாங்கள் இருவரும் சம்மதம் தெரிவித்தன் பேரில் எங்கள் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி அதில் உள்ள விவரங்களை நாங்கள் இருவரும் தெரிந்த கொண்ட பிறகுதான் கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனது நண்பர் என்பதால் அவருக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் துறையினர் காவல் நிலையத்தில் வைத்துதான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-01.30PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**